# இலங்கை புடைவைகள் மற்றும் ஆடைகள் உற்பத்தி நிறுவனம் - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை புடைவைகள் மற்றும் ஆடைகள் உற்பத்தி நிறுவனத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2012 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தினால் அமுல்படுத்தப்பட்ட மூன்று விசேட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அரசாங்கத்திடமிருந்தும் ஆடைத் தொழிற்சாலைகளிடமிருந்தும் முறையே ரூபா 18,443,072 மற்றும் ரூபா 486,176 தொகைகளாக ரூபா 18,929,248 கிடைத்திருந்தது. அந்நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்காகச் செலவு செய்யப்பட்டதன் பின்னர் ரூபா 2,695,058 தொகையான சேமிப்பிலிருந்து குறித்த சதவீதத்தினை இலாபத்திற்குச் செலவுவைப்பதற்குப் பதிலாக அச்சேமிப்பு முழுவதும் இலாபமாக வருமானக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மூன்று மோட்டார் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,102,250 தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. நிதிக்கூற்றுக்களில் அவை முற்பணங்களாகக் காட்டப்பட்டிருக்காததுடன் தவறாக ஏனைய நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

#### 1.2.2 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் சேவைகளைக் கடனுக்கு வழங்குவதன் மூலம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டி இருந்த ரூபா 25,798,386 தொகையில் ரூபா 3,261,651 தொகையானது 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டதுடன்

இக்கடனை அறவீடு செய்வதற்காக போதிய செயற்பாட்டு நடைமுறையினை நிறுவனம் அமுல்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) ஆடைத்துறையின் ஆக்கபூர்வத்தினை மேம்படுத்துவதற்காக செயற்திட்டத்தின் கீழ் நலன்பெறும் ஆடை உற்பத்தி நிறுவனங்களிலிருந்து ஒரு மாதத்திற்கு ரூபா 5,000 படி அறவிடப்பட வேண்டிய போதிலும் 13 நிறுவனங்களிலிருந்து ரூபா 165,000 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்காய்விற்காக சான்றுகள் இல்லாமை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| வியாபார கடன்பட்டோர் | 25,690,543 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் |
| நிலையான சொத்துக்கள் | 121,198,803 | பொருள் மெய்மையாய்வு அறிக்கை |

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை புடைவைகள் மற்றும் ஆடைகள் உற்பத்தி நிறுவன அதிகாரச் சட்டம் | |
| 3(1) ஆம் பிரிவு | நிறுவனத்தின் கட்டுப்பாட்டுச் சபை 12 நபர்களை உள்ளடக்கியிருக்க வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கட்டுப்பாட்டுச் சபை 9 நபர்கள் வரையாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ஆ) தாபன விதிக்கோவையின் 6 ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவு | ஒவ்வொரு உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோவைகளில் வரலாற்றுப் பத்திரம் பேணப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.5 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

அரசாங்க நிறுவனம் ஒன்றிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 1,186,671 தொகையானது திறைசேரியின் அங்கீகாரமின்றி கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக நிறுவனத்தின் செயற்பாடுகளிலிருந்து தோன்றிய நிதிசார் பெறுபேறுகள் ரூபா 6,209,102 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான (மீளக்கூறப்பட்ட Restated) மிகை ரூபா 13,935,340 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் ரூபா 7,726,238 தொகையான வீழ்ச்சி காணப்பட்டதுடன் அதற்காக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மொத்த வருமானம் ரூபா 12,670,107 தொகையால் அதிகரித்திருந்தமையும் நிர்வாக, உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகள், ஏனைய செலவுகள் என்பன ரூபா 21,390,847 கூட்டுமொத்த தொகையால் அதிகரித்தமையும் விசேடமாக தாக்கமளித்திருந்தன. எவ்வாறாயினும் இந்த அறிக்கையின் 1.2.1 ஆம் பந்தியில் தவறாகக் காட்டப்பட்டுள்ள ரூபா 2,695,058 தொகையான இலாபம் நீக்கப்படுமாயிருந்தால் மீளாய்வாண்டிற்கான இலாபம் அத்தொகையால் குறைவடையும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

புடவைகள் மற்றும் ஆடைகள் உற்பத்தி சார்ந்த கைத்தொழிலுக்காக ஆட்களுக்கு பயிற்சியளித்தலும் ஆராய்ச்சி, ஆலோசனை நடவடிக்கைகள் போன்ற சேவைகளை நிறைவேற்றுதலும் இந்நிறுவனத்தின் பிரதான குறிக்கோள்களாகும். அச்செயற்பாடுகளை நிறைவேற்றும் செயலாற்றல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றது.

| செயற்பாடு | 2012 | 2011 | மீளாய்வாண்டில் அதிகரிப்பு | அதிகரிப்பு மற்றும் குறைவுச் சதவீதம் |
|---|---|---|---|---|
| **பயிற்சியளித்தல்** | | | | |
| நடாத்தப்பட்ட கற்கை நெறிகளின் எண்ணிக்கை | 157 | 119 | 38 | 32 |
| பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | 3,903 | 1,790 | 2,113 | 118 |
| பயிற்சி நெறி வருமானம் (ரூபா மில்லியன்) | 34.58 | 24.56 | 10.02 | 41 |
| **பரிசோதனை** | | | | |
| பரிசோதனைகளின் எண்ணிக்கை | 50,105 | 43,864 | 6,241 | 14 |
| பரிசோதனை வருமானம் (ரூபா மில்லியன்) | 47.28 | 43.94 | 3.34 | 8 |
| **ஆலோசனை சேவைகள்** | | | | |
| ஆலோசனை சேவைகளின் எண்ணிக்கை | 20 | 18 | 2 | 11 |
| ஆலோசனை சேவை வருமானம் (ரூபா மில்லியன்) | 2.31 | 4.02 | (1.71) | (43) |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதி நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த 41 முழுநேர மற்றும் வார இறுதி கற்கை நெறிகள் மீளாய்வாண்டின் போது நடாத்தப்படாதிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது கற்கைநெறிகளை நடாத்துவதன் மூலம் கிடைக்கக்கூடியதாக இருந்த ரூபா 10,723,000 தொகையான வருமானம் நிறுவனத்தினால் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை 14 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் அதற்கு ஒப்பீடாக வருமான அதிகரிப்புச் சதவீதம் 7.6 ஆக இருந்தது.

(இ) கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ஆலோசனை சேவைகளின் எண்ணிக்கை 2 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் அதற்கு ஒப்பீடாக வருமானம் 42.5 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஈ) நிறுவனத்தினால் கருத்தரங்குகளை நடாத்துதல் வெளித்தரப்பினர்களின் வேண்டுகோளின் பேரில் இடம்பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது நிறுவனத்தினால் எவ்வித கருத்தரங்கும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் துறையின் முன்னேற்றத்தினைக் கருத்தில்கொண்டு உரிய கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேம்பாட்டு வேலைத்திட்டங்களை அமுல்படுத்துதல் நிறுவனத்தின் பிரதான பொறுப்பாக இருந்த போதிலும் முகாமைத்துவம் அதற்காக கவனம் செலுத்தியிருக்கவில்லலை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்பு பணத்தை உரிய திகதிகளில் செலுத்தாததன் காரணமாக நிறுவனத்தினால் மீளாய்வாண்டின் போது தாமதக் தண்டப்பணமாக ரூபா 895,698 செலுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக அதற்குப் பொறுப்பான நபர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கணனி கற்பித்தல் நிலையத்திற்காக 24 கணனிகள் 2 அச்சு இயந்திரங்கள், உள்ளக வலையமைப்பு வசதிகள் என்பன வழங்கப்பட்டிருந்தும் தகைமையுள்ள கணனி போதனாசிரியர் ஈடுபடுத்தப்படாதிருந்ததன் காரணமாக கற்கைநெறியினை முறைப்படியாக நடாத்த முடியாதிருந்தது.

(ஆ) நிறுவனத்திற்குச் சொந்தமான டீசல் கொள்கலனை திருத்தம் செய்வதற்காக 2012 செப்தெம்பர் 27 ஆந் திகதி ரூபா 109,920 செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதிவரை அக்கொள்கலன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவனத்தினால் 2009 ஆம் ஆண்டின் போது ஒரு வேன் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டு பழுதுபார்ப்பதற்காக ரூபா 2,601,175 கூட்டு மொத்தத் தொகை செலவு

செய்யப்பட்டிருந்தும் அவ்வாகனம் 2013 மார்ச் 31 ஆந் திகதி வரையும் ஓடும் நிலையில் இருக்கவில்லை.

## 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

### 3.4.1 பொறியியல் வேலைக் கட்டிடத்தினை நிர்மாணித்தல்

(அமேலே குறிப்பிடப்பட்ட கட்டிடத்தினை நிர்மாணிக்கும் கிரயத்தின் பொறியியலாளர் மதிப்பீடு ரூபா 8,966,702 ஆக இருந்துது. 2010 மே 03 ஆந் திகதி அந்த நிர்மாண ஒப்பந்தம் ரூபா 5,361,615 தொகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண நடவடிக்கை 2010 ஆகஸ்ட் 31 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை அந்த நிர்மாண நடவடிக்கை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் உரிய தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்தம் வழங்கப்பட்டதன் பின்னர் தொடக்க மதிப்பீடு 02 சந்தர்ப்பங்களில் ரூபா 1,515,034 கூட்டுமொத்த தொகையினால் அதிகரிக்கப்பட்டிருந்தது. இது தொடக்க ஒப்பந்த பெறுமதியில் 28% ஆக இருந்தது.

(இ) ஒப்பந்தகாரரினால் மேற்கொள்ளப்பட்ட சான்றுபடுத்திய வேலைகளின் பெறுமதி ரூபா 5,633,389 ஆக இருந்த போதிலும் செலுத்திய பணம் ரூபா 5,816,137 ஆக இருந்ததன் காரணமாக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 182,748 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.4.2 நிறுவனத்தின் வகுப்பறை, கருத்தரங்கு அறை, பணிப்பாளர் நாயகத்தின் அறை, புடைவை நெசவு செய்தல் அறை என்பவற்றைப் பிரித்தல்

மேலே குறிப்பிடப்பட்ட ஒப்பந்தம் ரூபா 3,252,646 தொகைக்கு 2012 நவம்பர் மாதம் வழங்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், மேலே குறிப்பிட்ட ஒப்பந்தம் 2013 சனவரி 31 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்யப்பட்டு ஒப்படைக்கப்பட வேண்டிய வேலை 2013 ஏப்ரல் 10 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அத்திகதியில் 69 நாட்களுக்காக அறவிடப்பட வேண்டி இருந்த ரூபா 112,216 தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்தக்காரருக்கு நிறுவனத்தினால் இதற்கு முன்னர் வழங்கப்பட்ட ஒப்பந்தம் உரிய காலத்தில் பூர்த்திசெய்து ஒப்படைக்கப்படாதிருக்கையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் இந்த ஒப்பந்தக்காரரின் கடந்தகால செயலாற்றலை கருத்தில் கொள்ளாது இந்த ஒப்பந்தம் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

## 3.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2009 இன் 12 ஆம் இலக்க இலங்கை புடவைகள் மற்றும் ஆடை உற்பத்தி நிறுவன அதிகாரச்சட்டத்தின் மூலம் ஆடை உற்பத்தி தொழிற்சாலை மற்றும் பயிற்சி நிறுவனம்,புடவைகள் பயிற்சி மற்றும் சேவை நிலையம் என்பவற்றை ஒருங்கிணைந்து 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து புடவைகள் மற்றும் ஆடை உற்பத்தி நிறுவனமாக புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்டிருந்த போதிலும் புதிதாக நிறுவப்பட்ட நிறுவனத்தின் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய பதவியணியினருக்காக மீளாய்வாண்டின் இறுதி வரை புதிய நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்காக புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் மீளமைத்தலின் கீழ் உத்தேச ஆட்சேர்ப்பு நடைமுறை, தேசிய சம்பளம் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழுவின் சிபார்சிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 இன் 12 ஆம் இலக்க இலங்கை புடவைகள் மற்றும் ஆடை உற்பத்தி நிறுவன அதிகாரச்சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் மூலும் நிறுவனத்தின் பதவியினரின் திறனையும் அறிவினையும் மேம்படுத்தும் செயற்பாட்டிற்காக நிறுவனத்தினால் பதவியணியினர் அபிவிருத்தி நிதியம் தோற்றுவிக்கப்பட வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தது எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதிவரை அப்பிரிவின் பிரகாரம் பதவியணியினர் அபிவிருத்தி நிதியம் தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாட்டிற்காக நிதியத்தினை உருவாக்குதல்

2012 செப்தெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பணிக்கொடைக்கான ஏற்பாட்டுக் கணக்கின் ரூபா 26,145,564 தொகையான பணம் எதிர்கால பொறுப்புக்களுக்காக முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவனத்தின் பதவியணியினர் 100 நபர்களை உள்ளடக்கியிருந்ததுடன் மீளாய்வாண்டில் நிறுவனத்தின் செயற்பாட்டு வருமானமும் செலவும் ரூபா 100 மில்லியனை மிகைத்திருந்தும் நிறுவனத்திற்காக நிரந்தர உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே நிறுவனத்தின் எத்துறை தொடர்பாகவும் போதிய உள்ளகக் கணக்காய்வு மீளாய்வாண்டின் போது இடம்பெற்றிருக்கவில்லை.

**4.2 கொள்வனவுத் திட்டம்**

அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.2.1(அ) மற்றும் (ஆ) பந்தியின் பிரகாரம் கொள்வனவு முகாமையாளரால் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்காக எதிர்பார்த்த கொள்வனவு நடவடிக்கைகளை உள்ளடக்கி பிரதான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் நிறுவனத்தால் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) பெறவேண்டிய கணக்குகள்

(ஆ) இருப்புக்கள் மற்றும் சொத்துக்கள் கட்டுப்பாடு

(இ) பதவியணியினர் நிர்வாகம்

(ஈ) நிர்மாண ஒப்பந்தம்